**செய்தி வெளியீடு எண்: 46/2022** **நாள்: 18.06.2022**

**பத்திரிக்கை செய்தி**

**<u>செனாய் நகர் மெட்ரோ இரயில் நிலையத்தில்</u>**
**<u>உலகத்தரத்தில் புதுப்பொளிவுடன் பொழுதுபோக்கு பூங்கா</u>**
**<u>சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரான</u>**
**<u>முதன்மை செயலாளர் எம்.ஏ.சித்திக் தகவல்</u>**

கோயம்பேடு, சென்னை செனாய் நகர் மெட்ரோ இரயில் நிலையத்தில் உலகத்தரம் வாய்ந்த புதுப்பொளிவுடன் பொழுதுபோக்கு பூங்கா அமைக்கப்பட்டு வருவதாகவும், விரைவில் இப்பூங்கா பொது மக்களின் பயப்பாட்டிற்கு வரும் என்று செனாய் நகர் மெட்ரோ இரயில் நிலைய பூங்காவை ஆய்வு செய்த போது சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரான முதன்மை செயலாளர் எம்.ஏ.சித்திக் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஆய்வின் போது, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரான முதன்மை செயலாளர் எம்.ஏ.சித்திக் தெரிவித்துள்ளதாவது:-

மக்களின் பொழுதுபோக்கிற்காக செனாய் நகர் மெட்ரோ இரயில் நிலையத்தில் திரு.வி.க.பூங்கா செயல்பட்டு வந்தது. தற்போது அப்பூங்கா சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் நிதியுதவியுடன் சுமார் ரூ.240 கோடி மதிப்பீல் புதுப்பொளிவுடன் பொழுதுபோக்கு பூங்காவாக பொது மக்களின் பயன்பாட்டிற்கு திறக்கப்படவுள்ளது. இந்த பூங்காவில் பல்வேறு சிறப்பு அம்சங்களும் ஏற்ப்படுத்தப்பட்டு வருகிறது. இப்பூங்காவில் படிப்பகம், சறுக்கு பயிற்சி, குழந்தைகள் பூங்கா, திறந்தவெளி திரையரங்கு, மட்டைப்பந்து பயிற்சி கூடம், நடைப்பயிற்சி பாதை, செயற்கை நீரூற்று, இரவு நேரத்தில் பல வண்ண செயற்கை நீரூற்றுகள் கண்கவரும் வகையில் அமைக்கப்பட்டு வருகிறது.

இப்பூங்காவில், யோகா மற்றும் தியானப்பயிற்சிக் கூடம் ஆண், பெண் இருவருக்கும் தனித்தனியாக அமைக்கப்பட்டு வருகிறது. கூடைப்பந்து, பூப்பந்து, கடற்கரை கைப்பந்து மைதானங்களும் அமைக்கப்பட்டு வருகிறது.

பூங்காவின் நான்குப் புறமும் மியாவாக்கி காடு போன்ற பல்வேறு வசதிகளுடன் கூடிய உலகத்தரம் வாய்ந்த நவீன பொழுதுப்போக்கு பூங்கா

அமைக்கப்பட்டு வருகிறது. இங்கு அமைக்கப்பட்டு வரும் பூங்கா மற்ற பூங்காகளுக்கு எடுத்துகாட்டாக திகழும் வகையில் வடிவமைக்கப்படுகிறது.

செனாய் நகர் மெட்ரோ இரயில் நிலைய அடித்தளம் ஒன்றில் அனைத்து இலகுரக வாகங்களும் நிறுத்தும் இடம் ஒருப்புறம் அமைக்கப்பட்டு வருகிறது. அதேபோல், அடித்தளம் இரண்டில் பெரிய வணிக வளாகம் மற்றும் உணவகங்கள் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த அடித்தளத்திற்கு மேற்பகுதியில் (தரைதளம்) தான் இந்த அழகிய பொழுதுபோக்கு பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது.

இப்பூங்காவின் நுழைவு வாயிலில் இருந்து மெட்ரோ இரயில் நிலையம், தரைத்தளம், அடித்தளம் போன்ற இடங்களுக்கு எளிய வகையில் சென்று வர படிக்கட்டு, மின்தூக்கிகள் மற்றும் நகரும் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டு வருகிறது.

இந்த ஆய்வின் போது, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரான முதன்மை செயலாளருடன், இயக்குநர் தி. அர்ச்சுனன் (திட்டங்கள்), முதன்மை பொது மேலாளர் ரேகா பிரகாஷ் (திட்டம் மற்றும் வடிவமைப்பு), துணை பொது மேலாளர் கே.ஆர்.தங்கராஜ், கூடுதல் பொது மேலாளர் எஸ். சதீஷ் பிரபு (இரயில் பராமரிப்பு மற்றும் இயக்கம்), இணை பொது மேலாளர் ஸ்வாதி மகாஜன் மற்றும் பணியாளர்கள் இருந்தார்கள்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**